CC No.78/2019 , நாள்: 07.11.2020

அ.சா. 4___ தியாகராஜன் த/பெ. மனோகரன்

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் விக்கினம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் 2ம் எதிரியையும் தெரியும். 1ம் எதிரி பழனியையும் தெரியும். கடந்த 14.02.2019ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த மாரியப்பன் மகன் சங்கர் என்பவரும் எதிரிகளின் நிலத்து அருகே உள்ள ரோடின் ஓரமாக பேசிக்கொண்டிருந்தபோது போச்சம்பள்ளி காவல் ஆய்வாளர் அங்கு வந்து எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு எழுதினார்கள். அதற்கு சாட்சியாக என்னிடமும் சங்கரிடமும் கையொப்பம் பெற்று விசாரித்தார்கள். அதற்காக நான் பார்வை மகஜரில் முதலாவது சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் போலிசார் அங்கு வந்து பார்த்து படம் வரைந்துதான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சண்டை நடந்ததாக கூறினார்கள் அதை நான் பார்க்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பமிட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.